1995 ஏப்ரல் 7]

(1)	(2)
29. அரசியலமைப்புச் சட்டத்தின் 15(4) மற்றும் 10(4) பிரிவுகளின் கீழ் அளிக்கப்படும் இட ஒதுக்கீடு திட்டமும், ஏனைய திட்டமும் முறையாக செயல் படுத்தப்படுவதை கண்காணிப் பதற்கு இயக்குநருக்கு உதவியாக புள்ளியல் துறை இணை இயக்குநர் நியமனம் செய்தல்.	புள்ளியியல் பிரிவு ஒன்று பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநகரத்தில் ஏற்படுத்தப்பட்டது.

275—

விளாத்துறை பேரூராட்சியில் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளியாக்குதல்

***33390**—*திரு. மா. சுந்தரதாஸ்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளாத்துறை பேரூராட்சி, உதச்சிக்கோட்டை அரசு நடுநிலைப்பள்ளியையும், மாராயப்புரம் அரசு நடுநிலைப்பள்ளியையும் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]